Registered as a Newspaper
பக்கங்கள் 04
விலை: ரூபா 5-00

Chundikuli Branch Library

# ஈழநாதம்

THE EELANAATHAM
மக்கள் தினசரி
Peoples Daily
நாதம் 04
திருவள்ளுவர் ஆண்டு 2024
ஆவணி 30
[15-09-1993]
புதன்கிழமை
ஓசை 209

## மக்கள் நடமாட்டத்திற்கு மன்னாரில் புதிய நடைமுறை

மன்னார்த்தீவில் பயணிகள் மற்றும் மக்களின் நடமாட்டத்திற்கு படையினர் புதிய நடைமுறைகளை விதித்துள்ளனர் இதன்படி மன்னார் தீவினுள் தினமும் இடத்துக்கு இடம் நடமாடுவோர் தனியான பதிவேடுகளில் பதியப்பட்டு அதற்கான தனியான அடையாள அட்டை வழங்கப்படவுள்ளது. விருந்தினராக வீடுகளில் தங்கியிருப்போருக்கு தனியான படிவங்களும், இராணுவத்தினரின் கட்டுப்பாட்டின் கீழில்லாத பகுதிக்கு செல்வோருக்கு பிரத்தியேக படிவங்களும், பிறமாவட்டங்களிலிருந்து இடம்பெயர்ந்து வந்திருப்போருக்கென விசேட படிவங்களும், குடும்ப உறுப்பினர் ஒவ்வொருவரது விபரமும் அடங்கிய தனியான படிவமும் வழங்கப்படவுள்ளது.

(3ஆம் பக்கம் பார்க்க)

# கொழும்பில் புலிகள் தாக்கலாம்!

# பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரம்

## "நில்கிரி"யில் மண்ணெய்; 'ருகுணு'வில் உரம்

யாழ் மாவட்டத்திற்கான ஒரு தொகுதி மண்ணெண்ணெய் "நில்கிரி" கப்பல் மூலமும் மற்றும் ஒரு தொகுதி உரம் "ருகுணு" கப்பல் மூலமும்பருத்தித்துறை துறைமுகத்திற்கு எடுத்துவரப்படவுள்ளதென யாழ்.செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இவ் இரு கப்பல்களிலும் "ருகுணு" கப்பல் முதலில் பருத்தித்துறை நோக்கிப் புறப்படவுள்ளது. இதற்கு முன்னர் மண்ணெண்ணெய் 'ருகுணு' கப்பலில் எடுத்துவர ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன இறுதி நேரத்தில் நில்கிரியில் மண்ணெண்ணெயும், ருகுணுவில் உரமும் ஏற்ற அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இவ் இருகப்பல்களும் இம்மாத இறுதிப் பகுதியில் பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது (பா)

## வின்சர் தியேட்டரில் உணவுக் களஞ்சியம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திற்கு வரும் உணவுப் பொருள்களை களஞ்சியப்படுத்தி வைத்திருப்பதற்காக யாழ். வின்சர் தியேட்டர் யாழ். செயலகத்தினால் திருத்தப்படவுள்ளது.

இத்தியேட்டர் ஏற்கனவே சிறிலங்கா விமானப்படையினரின் குண்டுவீச்சுத் தாக்குதலிற்கு இலக்காகி கூரைத்தகடுகள் உடைந்திருந்தமை தெரிந்ததே,

இத்தியேட்டரைத் திருத்துவதற்கான ஒரு தொகுதி கூரைத்தகடுகள் 'குமாரி' கப்பல் மூலம் கொழும்பில் இருந்து இங்கு எடுத்துவரப்படவுள்ளன.

இதற்கான அனுமதியை பாதுகாப்பு அமைச்சு யாழ் அரச அதிபருக்கு வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இத்தியேட்டர் திருத்தப்பட்டபின் இதுவும் யாழ். செயலக புனர்வாழ்வுப் பகுதி உணவுக் களஞ்சியமாக செயற்படவுள்ளது. [பா] [நி]

## ஜனாதிபதியின் நிலைப்பாடு படையினரை வழிநடத்தும்

### சிசில் வைத்தியரத்தின தெரிவிப்பு

"நாட்டில் காணப்படுவது பயங்கரவாதப் பிரச்சினையே இனப்பிரச்சினை அல்ல" என்ற ஜனாதிபதி டி.பி. விஜேதுங்காவின் முடிவு படையினர் வடக்கில் யுத்தம்புரிய நல்ல ஒரு வழிகாட்டியாக அமைகிறது என இராணுவத் தளபதி சிசில் வைத்தியரத்தின தெரிவித்தார். இது படையினரை தெளிவான பாதைக்கு கொண்டு செல்லும் எனவும் அவர் தெரிவித்தார்.

இந்த பிரச்சினையை பிரசார சாதனங்கள் இனப்பிரச்சினையாக காட்ட முயல்கின்றன என தெரிவித்த அவர், அண்மையில் படையில் புதிதாக இணைத்துக் கொள்ளப்பட்ட 10,000 பேரும் எதிர்கால நடவடிக்கைகளுக்கு நன்கு பயன்படுவர் எனவும் கூறினார்

## உள்ளே...

தியாகி திலீபனின் உருவப் படம் இணைக்கப்பட்டுள்ளது.

'வெலிஓயா' சிங்கள குடியேற்ற வாசிகளுக்கு

## கொழும்பு - கட்டுநாயக்கா வரை தீவிர பாதுகாப்பு நடைமுறை

[கொழும்பு]

விடுதலைப் புலிகள் பெரும் தாக்குதல் ஒன்றை நடத்த திட்டமிட்டுள்ளதாக கிடைத்த தகவல்களை அடுத்து கொழும்பிலிருந்து கட்டுநாயக்கா விமானநிலையம் வரையிலான பகுதிக்கு பொலிசாரும், இராணுவத்தினரும் விசேட கூட்டுப் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாக சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள்காட்டி ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன.

கரும்புலி உறுப்பினர்களை கொண்ட அணியொன்றும் வெடிகுண்டு நிபுணர்களை கொண்ட குழுவும் கொழும்பு வந்திருப்பதாக கிடைத்த தகவலை அடுத்தே இந்நடவடிக்கை எனப் பாதுகாப்பு வட்டாரங்களினால் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை நேற்று மாலை ஆறுமணியுடன் முடிவடைந்த 48 மணி நேரத்தில் 30 விடுதலைப் புலி சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டு இருப்பதாக கொழும்பில் சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

வாகனங்கள் தொடர்ந்து சோதனையிடப்படுவதாகவும் விமானநிலையச் சுற்று வட்டாரத்தில் வாகனங்களை நிறுத்துதல், அநாவசியமாக நடமாடுதல் போன்றவற்றிற்கு பொலிஸ்-இராணுவ விசேட கூட்டுப் பாதுகாப்பு பிரிவினர் தடுத்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை விமானத்தில் ஏற்றப்படும் பொதிகள், மற்றும் பயணிகள் கொண்டு செல்லும் பொதிகள் தொடர்பாக அவதானமாக இருக்குமாறு இவ் விசேட பாதுகாப்பு பிரிவினர் ஆலோசனை தெரிவித்துள்ளனர் எனவும் தெரியவருகின்றது.

## கொழும்பின் பாதுகாப்பு விசேட படையினர் வசம்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் தாக்குதல் குறித்து அச்சம் ஏற்பட்டுள்ளதை அடுத்து கொழும்பு நகரின் பாதுகாப்பு விசேட [illegible]

இருந்து தெரியவருகிறது.

கொழும்பு நகரின் பாதுகாப்பிற்கு சிறிலங்கா இராணுவத்தினரின் 12-வது பிரிவினரும் [illegible]

## வீரச்சாவு



கப்டன் வண்ணம்



கப்டன் கதிரவன்

நேற்று முன்தினம் இரவு 7 மணியளவில் யாழ். மாவட்டத்தில் ஏற்பட்ட எதிர்பாராத விபத்தொன்றில் விடுதலைப் புலிப் போராளி ஒருவர் வீரச்சாவடைந்தார். வீரச்சாவடைந்த கப்டன் வண்ணம் [சிதம்பரப்பிள்ளை வடிவேல் - பழம்பாசி நெடுங்கேணி] என்பவருக்கு [illegible]

பூநகரிப் பகுதியில் கடந்த 10ஆம் திகதி இரவு 11-45 மணியளவில் சிறிலங்கா இராணுவத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஏற்பட்ட திடீர் மோதலில் விடுதலைப் புலிப் போராளி ஒருவர் வீரச்சாவடைந்தார். வீரச்சாவடைந்த கப்டன் கதிரவன் / றோகன் (வீராப்பு சந்திரன் - 2ஆம் யூனிற், சேம [illegible]

... படவுள்ளது. (பா) (நி)

டுள்ளதாக சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள்காட்டி ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன.

கரும்புலி உறுப்பினர்கள் கொண்ட அணியொன்றும் வெடிகுண்டு நிபுணர்கள் கொண்ட குழுவும் கொழும்பு வந்திருப்பதாக கிடைத்த தகவலை அடுத்தே இந்நடவடிக்கை எனப் பாதுகாப்பு வட்டாரங்களினால் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை நேற்று மாலை ஆறுமணியுடன் முடிவடைந்த 48 மணி நேரத்தில் 30 விடுதலைப் புலி சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டு இருப்பதாக கொழும்பில் சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

வாகனங்கள் தொடர்ந்து சோதனையிடப்படுவதாகவும் விமானநிலையச் சுற்று வட்டாரத்தில் வாகனங்களை நிறுத்துதல், அநாவசியமாக நடமாடுதல் போன்றவற்றிற்கு பொலிஸ்-இராணுவ விசேட கூட்டுப் பாதுகாப்பு பிரிவினர் தடுத்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை விமானத்தில் ஏற்றப்படும் பொதிகள், மற்றும் பயணிகள் கொண்டு செல்லும் பொதிகள் தொடர்பாக அவதானமாக இருக்குமாறு இவ் விசேட பாதுகாப்பு பிரிவினர் ஆலோசனை தெரிவித்துள்ளனர் எனவும் தெரியவருகின்றது.

## ஜனாதிபதியின் நிலைப்பாடு படையினரை வழிநடத்தும்

### சிசில் வைத்தியரத்தின தெரிவிப்பு

''நாட்டில் காணப்படுவது பயங்கரவாதப் பிரச்சினையே இனப்பிரச்சினை அல்ல'' என்ற ஜனாதிபதி டி.பி. விஜேதுங்காவின் முடிவு படையினர் வடக்கில் யுத்தம்புரிய நல்ல ஒரு வழிகாட்டியாக அமைகிறது என இராணுவத் தளபதி சிசில் வைத்தியரத்தின தெரிவித்தார். இது படையினரை தெளிவான பாதைக்கு கொண்டு செல்லும் எனவும் அவர் தெரிவித்தார்.

இந்த பிரச்சினையை பிரசார சாதனங்கள் இனப்பிரச்சினையாக காட்டமுயல்கின்றன என தெரிவித்த அவர், அண்மையில் படையில் புதிதாக இணைத்துக் கொள்ளப்பட்ட 10,000 பேரும் எதிர்கால நடவடிக்கைகளுக்கு நன்கு பயன்படுவர் எனவும் கூறினார்

### உள்ளே...

தியாகி திலீபனின் உருவப் படம் இணைக்கப்பட்டுள்ளது.

## கொழும்பின் பாதுகாப்பு விசேட படையினர் வசம்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் தாக்குதல் குறித்து அச்சம் ஏற்பட்டுள்ளதை அடுத்து கொழும்பு நகரின் பாதுகாப்பு விசேட படையினர் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது.

கொழும்பு நகரின் பாதுகாப்பிற்கு சிறிலங்கா இராணுவத்தினரின் 12-வது பிரிவினரும் கடற்படையினரும் விமானப் படையினரும் நகர பொலிசாருடன் இணைந்து செயற்பட டணிக்கப்பட்டுள்ளனர்.



### கப்டன் வண்ணம்

நேற்று முன்தினம் இரவு 7 மணியளவில் யாழ், மாவட்டத்தில் ஏற்பட்ட எதிர்பாராத விபத்தொன்றில் விடுதலைப் புலிப் போராளி ஒருவர் வீரச்சாவடைந்தார். வீரச்சாவடைந்த கப்டன் வண்ணம் [சிதம்பரப்பிள்ளை வடிவேல் - பழம்பாசி நெடுங்கேணி] என்பவருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.



### கப்டன் கதிரவன்

பூநகரிப் பகுதியில் கடந்த 10ஆம் திகதி இரவு 11-45 மணியளவில் சிறிலங்கா இராணுவத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஏற்பட்ட திடீர் மோதலில் விடுதலைப் புலிப் போராளி ஒருவர் வீரச்சாவடைந்தார். வீரச்சாவடைந்த கப்டன் கதிரவன் / றோகன் (வீரப்பு சந்திரன் - 2ஆம் யுனிற், சேமமடு, வவுனியா) என்பவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றனர்.

## 'வெலிஓயா' சிங்கள குடியேற்ற வாசிகளுக்கு இராணுவப் பாதுகாப்பில் நம்பிக்கை இல்லையாம்

### பௌத்த பிக்கு தெரிவிப்பு

(கொழும்பு)

'வெலிஓயா' சிங்களக் குடியேற்ற வாசிகள் இராணுவத்தினர் மீது நம்பிக்கை இழந்து விட்டதாகவும், இதனால், குடியேற்ற வாசிகள் அப்பகுதியை விட்டுப் பெருமளவில் வெளியேறி விட்டதாகவும் அங்குள்ள பௌத்த குரு ஒருவர் தெரிவித்தார்.

வண. பொலன்னறுவே நிகலஸ்சாரோ தேரோ என்னும் இப்பிக்கு வெலிஓயா பரமித்தாராமய விகாரையின் பிரதம குருவாவார்.

மேலும் அவர் தெரிவிக்கையில்,

மணலாறு மாவட்டத்தில் சிறிலங்கா அரசினால் குடியேற்றப்பட்ட 4000 குடும்பங்களில் மூவாயிரம் குடும்பங்கள் அங்கிருந்து வெளியேறிவிட்டதாகவும் குறிப்பிட்டார்.

இக்குடும்பங்கள் கடந்த யூலை 25 ஜனகபுர தாக்குதல் போன்று மேலும் தாக்குதல்கள் நடைபெறும் என அஞ்சுவதாலும் அங்குள்ள படையினரின் பாதுகாப்பில் அவர்கள் நம்பிக்கை இழந்துவிட்டதாலும் அங்கிருந்து வெளியேறி

(3 ஆம் பக்கம் பார்க்க)

## படைத்துறைக் கட்டமைப்பு மாற்றம் இரகசியமாகவே நிறைவேறியது

### பாதுகாப்பு செயலாளருக்கே தெரியாதாம்

[கொழும்பு]

இம் மாதம் ஆறாம் திகதி சிறிலங்கா ஆயுதப்படை கட்டமைப்பில்செய்யப்பட்டமாற்றம், மிகவும் இரகசியமாகவே வைக்கப்பட்டிருந்ததாகவும், இது குறித்து பாதுகாப்புச் செயலாளர் வால்டர் பெர்னாண்டோவோ, முப்படைத் தளபதிகளோ அறிந்திருக்கவில்லை எனவும் 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகை தெரிவிக்கின்றது.

இம்மாதம் ஆறாம் திகதி, கூட்டுப்படை தலைமையகம் கலைக்கப்பட்டதோடு, பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் கீழ் ஒரு பாதுகாப்பு ஒருங்கிணைப்புக்குழு ஒன்றும் உருவாக்கப்பட்டது தெரிந்ததே. அத்தோடு பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக ஜெனரல் ஹமில்டன் வணசிங்கா நியமிக்கப்பட்டதும் அறிந்ததே.

இது குறித்து சண்டே ரைம்ஸின் செய்தியாளர், குறிப்பிடுகையில் பாதுகாப்பு செயலாளர் வால்டர் பெர்னாண்டோ மற்றும் பாதுகாப்பு படைத் தளபதிகளுக்குக் கூட தெரியாத முறையில் இந்த மாற்றங்கள் செய்யப்பட்டதாக தெரிவித்துள்ளார்.

இது குறித்து மேலும் குறிப்பிடுகையில், ஜனாதிபதியின் செயலகத்துக்கு அழைக்கப்பட்டபாதுகாப்புச் செயலாளருக்கு இராணுவகட்டமைப்பில் செய்யப்பட்ட மாற்றங்கள் தெரிவிக்கப்பட்டதோடு, அவரது ராஜினாமாவும் எதிர்பார்க்கப்பட்டது. அத்தோடு,

(4 ஆம் பக்கம் பார்க்க)

## திலீபன் நினைவுநாள் இன்று ஆரம்பம் உணர்வு பூர்வ அஞ்சலிக்கு ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

தியாகமரணமடைந்த லெப். கேணல் திலீபனின் 6ஆம் ஆண்டு நினைவு நாள்கள் இன்று முதல் ஆரம்பமாகின்றன.

இன்று முதல் தியாகி திலீபனுக்கு யாழ். குடா நாட்டு மக்கள் தமது உணர்வு பூர்வ அஞ்சலிகளை செலுத்துவார்கள். இதற்கான சகல ஏற்பாடுகளும் நேற்று நள்ளிரவுடன் நிறைவடைந்தன.

குடா நாட்டின் பல்வேறு பகுதிகளிலுமுள்ள அலுவலகங்கள், பாடசாலைகள், வர்த்தக நிலையங்கள் சனசமூகநிலையங்கள், மாதர் சங்கங்கள் உட்பட பொதுசன அமைப்புக்கள் ஆகியவற்றின் அலுவலகங்கள் மற்றும் பொது மக்கள் கூடும் இடங்கள் ஆகியவற்றிலும் தியாகி திலீபனின் உருவப்படங்கள் அலங்கரிக்கப்பட்ட பந்தல்களில் வைக்கப்பட்டு அஞ்சலி செலுத்துவதற்குரிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேலும் குடாநாட்டின் சகல பகுதிகளிலும் வட்டப்பிரிவு ரீதியாக சிரமதான நிகழ்ச்சிகளுக்கும் அடையாள உண்ணாவிரதப் போராட்டங்களுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக எமது பிராந்திய செய்தியாளர்கள் அறிவித்துள்ளனர்.

### திலீபன் நினைவு நாளைய உண்ணாவிரத நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

தியாகி திலீபனின் ஆறாம் ஆண்டு நினைவாக யாழ். குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இன்றுமுதல் அடையாள உண்ணாவிரதப்போராட்டமும், சிரமதானப் பணிகளும் மேற்கொள்ளப்படவுள்ளன.

பின்வரும் இடங்களில் மேற்படி உண்ணாவிரதப் போராட்டமும், சிரமதானப் பணிகளும் நாளை மேற்கொள்ளப்படவுள்ளன.

சங்கானை வட்டத்தில் அரசடி வைரவர் கோயில் முன்றலில் சங்கானை சிற்றூர் மக்களும். கோப்பாய் வட்டத்தில் வாய்க்கால் தரவை பிள்ளையார்கோயில் முன்றலில் சிறுப்பிட்டி சிற்றூர் மக்களும், சண்டிலிப்பாய் வட்டத்தில் ஆனைக்கோட்டை முத்தவினாயகர் கோவில் முன்றலில் மானிப்பாய் சிற்றூர் மக்களும், உடுவில், தெல்லிப்பளை வட்டத்தில் சுன்னாகம் சிவன் கோவில் முன்றலில் உடுவில் சிற்றூர் மக்களும், யாழ்ப்பா

(3 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவத் தோல்விகளுக்கு ஹமில்டனின் புதிய விளக்கம்

''ஒரு சமரில் பெற்ற வெற்றி முழு யுத்தத்திலும் பெற்ற வெற்றியாகாது'' என பாதுகாப்பு அமைச்சின் புதிய செயலாளர் ஜெனரல் ஹமில்டன் வணசிங்க தெரிவித்துள்ளார்.

அண்மைக்காலத்தில் வடக்கில் ஏற்பட்ட இராணுவப் பின்னடைவுகள் குறித்து கருத்துத் தெரிவிக்கையில் இவ்வாறு கூறிய அவர் ''இவ்வாறான பின்னடைவுகள் எதிர்பார்க்கப்படுவனவே'' என்றார்.

''அதேவேளை ஒரு சமரில் தோற்பதும் யுத்தத்தில் வெற்றியைத் தேடித் தரப்போவதில்லை'' என மேலும் குறிப்பிட்டார்,

அவர் மேலும் தெரிவிக்கையில் ''நாம் பயங்கரவாதிகளுடனே யுத்தம் புரியும் அதேவேளை சமாதானத்தை விரும்பும் தமிழ் மக்களின் இதயங்

( 4 ஆம் பக்கம் பார்க்க )

## போரில் குறிப்பிடத்தக்க வெற்றி புலிகள் பெற்றுள்ளனர்

### சிங்கள அரசியல் விமர்சகர்

(கொழும்பு)

இரண்டாவது, ஈழப்போர் இராணுவக் கட்டமைப்பிலும் கட்டளையிடும் அமைப்பிலும் அடிக்கடி மாற்றங்களைக் கொண்டுவருகிறது. ஆனால் இந்த மாற்றங்கள் எதனையும் சாதிக்கவில்லை என அரசியல் இராணுவ விமர்சகர்கள் தெரிவிக்கின்றனர்.

ஆனால் புலிகள் குறிப்பிடத்தக்க அளவு அரசியல், இராணுவ பிரசார வெற்றிகளைப் பெற்றுள்ளதுடன் உளவியல் ரீதியாக அரசாங்கத்திற்கும் படையினருக்கும்

(3ஆம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## அராலியூரரின் நாடகங்கள்

1955, 1956ஆம் ஆண்டுகளில் பேராதனைப் பல்கலைக் கழகத்தில், பேராசிரியர் கணபதிப்பிள்ளையின் நாடகங்களில் நடித்த - 250 நாடகங்கள் எழுதிய அராலியூர் சுந்தரம் பிள்ளையின் நாடகங்கள் 1 கெட்டிக்காரர்கள் 2 முதலாம்பிள்ளை 30/- (5838)

## இலவச சட்ட உதவி

சிறிலங்கா அரசாங்க பாதுகாப்பு படையினரால் கைது செய்யப்பட்டு இதுவரை விடுவிக்கப்படாது தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களுக்கு உதவும் வகையில் இலவச சட்ட உதவித் திட்டம் ஒன்றை இனங்களுக்கு இடையில் நீதிக்கும் சமத்துவத்திற்குமான இயக்கம் மேற்கொண்டுள்ளது

## கட்டுப்பாட்டு விலையில் ரயர்கள், ரியூப்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சுகாதார சேவைகள் பிராந்திய பணிமனையின்கீழ் பணிபுரியும் சகல ஊழியர்களுக்கும் கட்டுப்பாட்டு விலையில் துவிச்சக்கரவண்டி ரயர்ரியூப்களை வழங்கிவருகிறது. முதற்கட்டமாக 200 ரயர் ரியூப்கள் கொழும்பிலிருந்து எடுத்துவரப்பட்டு வழங்கப்பட்டுள்ளது. மிகுதி ரயர் ரியூப்கள் கட்டம் கட்டமாக வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (சி)

## ஆதாரம் காட்டி பெறவும்

(வடமராட்சி)

பெண்களுக்கான கைக்கடிகாரம் ஒன்று கண்டெடுக்கப்பட்டு பருத்தித்துறை துறைமுகத்தில் பொதி சுமக்கும் தனியார் லொறி சங்க ஒன்றிய அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் அவ் அலுவலகத்தில் தகுந்த ஆதாரத்தைக் காட்டி பெற்றுக் கொள்ளலாம். (யோ)

## உலர் உணவு விநியோகம்

[யாழ்ப்பாணம்]

புங்குடுதீவு - நயினாதீவு பலநோக்கு கூட்டுறவுச் சங்க பாவனையாளர்களுக்குரிய ஆகஸ்ட் மாத இறுதி இரண்டு வார நிவாரண உலர் உணவுப்


# மாவீரர் உருவப்படங்கள் மேலும் வெளிவந்துள்ளன

ஆ. க. வெ. நடவடிக்கையின்போது தற்கொடையாளர்களான பின்வரும் மாவீரர்களின் உருவப்படங்கள் அண்மையில் வெளிவந்துள்ளன.

01 கண்ணன் தர்மன்பிள்ளை ஏாம்பரம் மட்டு.
02 லெப். சுவா இராசப்பு அன்ரனி அமலநேசன் திருமலை
03 வின்சன் முத்துராசா சுரேஸ்குமார், திருமலை
04 செந்தில், பாலசுந்தரம் செல்வகுமார், மணலாறு.
05 வீரவன். சிவன் சந்திரன். திருமலை.
06 லெப். நிரோ, உதயகுமாரி வல்லிபுரம், மல்லாகம்.
07 தப்பறி. குணபாலசிங்கம் திருக்குமரன், கொடிகாமம்.
08 லெப் குணேஸ், சின்னத்தம்பி சங்கர், தொண்டமானாறு
09 லெப். அர்ஜுன், சிவானந்தன் நந்தகோபால், திருமலை.
10 வீ வே தியாகராஜன், முருகையா ராஜ் திருமலை.
11 கப்டன் உதயகுமார் ஆறுமுகம் தனபாலசிங்கம் திருமலை
12 மேஜர் ரெட்ணராஜ் / ரெட்டி, தம்பிப்பிள்ளை அந்தோனிதாசன், மன்னார்.
13 வீ. வே. செல்வியற். வேலாயுதம் நாகேஸ்வரன். மணலாறு
14 வீ வே சஜந்சா இந்திராணி மணியம், கிளிநொச்சி
15 வீ. வே புருஸ்லி / மூர்த்தி, சிவரத்தினம் சின்னவன், மட்டு
16 லெப். குணா, வன்னியசிங்கம் புஸ்பராசா, மணலாறு.
17 வீ வே, அயூர்தன், பொன்னுத்துரை மோகன், கைதடி.
18 வீ. வே. யோகன், சின்னத்துரை கண்ணன், சுழிபுரம்
19 வீ. வே நசார், பியதாச ரவி, வவுனியா.
20 வீ வே. கிஜி செல்லத்துரை சிற்றம்பலம், மட்டு
21 லெப். பசுபதி, இரத்தினசபாபதி ஜெகதீஸ்வரன் சாவகச்சேரி.
22 வீ. வே சுபைர், கந்தசாமி இராஜேந்திரம், அரியாலை.
23 வீ வே கணேஸ், இராசதுரை ஜெயரத்தினம், முள்ளை.
24 வீ வே. பவி, புஸ்பசாகினி சிவசுப்பிரமணியம், காரைநகர்
25 வீ. வே. மேகன், ஆறுமுகம் அரசரத்தினம், திருமலை.
26 2-ம் லெப். தனேந்திரன் / அக்பர், துரைசிங்கம் சிறீதரன், இளவாலை
27 வீ வே நாகராசா, முத்துராசா நாகராசா, மாங்குளம்
28 வீ வே. நேரு, சாம்பமூர்த்தி குமரேசன், புத்தூர்
29 கப்டன் தினேஸ், செல்லத்தம்பி சிறீதரன். மட்டு.
30 சுதாகர், இராசதுரை சுகுமார், அச்சுவேலி.
31 வீ, வே. விக்கி, தங்கராசா விக்கினேஸ்வரன், அம்பாறை
32 லெப். கௌசலன், சக்திவேல் நாகேஸ்வரன், வவுனியா
33 வீ. வே. லவித், வேல்முருகு விஜயகுமார், திருமலை
34. மேஜர் கணேஸ் வைத்திலிங்கம் துரைவடிவேல் தொண்டமானாறு.
35. வீ. வே சுகந்தினி யோகா கணபதிப்பிள்ளை வவுனியா.
36. வீ. வே. ஈசன் / தீபன் பாலசுந்தரம் ரவிச்சந்திரன் மட்டு.
37. வீ. வே. கதிர் கிஸ்ணபிள்ளை பாலச்சந்திரன் திருமலை.
38. வீ. வே. பிரான்சிஸ் கதிரவேல் குமாரவேல் கரவெட்டி

1991 ஆம் ஆண்டு ஆ. க. வெ. நடவடிக்கையின் போது ஆனையிறவுப் பிரதேசத்தில் தம்மைத் தற்கொடையாளர்களாக்கிக் கொண்ட மேல்வரும் மாவீரர்களின் போஸ்ரர் படங்களை சிறு அன்பளிப்புச் செலுத்துவதன் மூலமாக தமிழீழ மாவீரர் பணிமனை, கோக்குவிலில் பெற்றுக் கொள்ளலாம் என்று தமிழீழ மாவீரர் பணிமனை அறிவித்துள்ளது

# 1-ம் ஆண்டு நினைவலைகள்



பிறப்பு
16. 06. 1977

# 4-ம் ஆண்டு நினைவுத்துளிகள்



பிறப்பு
03-02-1963

வீரச்சாவு
15 09-1989

## கப்டன் அக்காச்சி (ஜெகன்)

[சிவகுருநாதன் சிறீகாந்தன், நீர்வேலி]

ஆதவனே, நீமறைந்து ஆண்டுநான்கு ஆனதின்று
ஆனாலும் எம்நெஞ்சில் அழியாத ஓவியம் நீ
உத்தமனே உன்பெயரால் உயர்ந்துள்ள கிராமத்தில்
நித்தம் நித்தம் உன்நினைவுடன் வாழ்கின்றோம்.

உன்நினைவைச் சுமந்து நிற்கும்,
அக்காச்சி எழுச்சிக் குடியிருப்பு மக்கள்.

அக்காச்சி எழுச்சிக் குடியிருப்பு
வாதரவத்தை,
புத்தூர். (6018)

# 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு
8-05-1976

வீரச்சாவு
15-0[illegible]-19[illegible]

## வீரவேங்கை ஜெகன்

[ஜெயநாதன் ஜெறோம்]

அன்பான மகனே! நீ சிறுவயதினில் உனது உணர்வுகளுக்கெதிராகப் போராடி, இலட்சியத்தில் வெற்றி பெற்று, மாவீரனாகி இன்று இரு ஆண்டுகள் ஆகின்றன.

ஏனைய மாவீரர்களுக்கும் வீர அஞ்சலிகள்.

25, கடம் வீதி,
யாழ்ப்பாணம் [5905]

அம்மா, அப்பா,
அண்ணன்.

# 2-ம் ஆண்டின் பாச நினைவலைகள்



## லெப். மதுரா

(பரமு வடிவாம்பாள்)

தாயின் மடியில்: 18-09 1971
தமிழீழ மண்ணில்: 08-09-1991
திதி: 15-09-93

ஓ... எங்கள் மதுரா...!
உன்னை இழந்து... நாம் உறவைப் பிரிந்து...
இன்று... இரண்டு ஆண்டுகள் ஓடி மறைந்தன!
வண்ண நிலாவே! வடிவாம்பாளே!
தண்ணமுதே எம் தாயக விடிவே!
இதய பூமியாம் மணலாறதனில்
இனிய புலியே சுமைதீர சரிந்தாய்!
இதயம் நெகிழும் கண்ணீருடனே
இதய அஞ்சலிகள் ஈகிறோம் நாமே!

15-09-93 இன்று எமது இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்தில் போராளிகள், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்

தேவன் வீதி,
சாவகச்சேரி வடக்கு,
மீசாலை. (6010)

- குடும்பத்தினர்

# நினைவு கூருகின்றோம் ... 1993-09-15

1984ஆம் ஆண்டு இதேதினத்தில் சிறிலங்கா கடற்[illegible]

டெறவும்
(வடமராட்சி)

பெண்களுக்கான கைக்கடிகாரம் ஒன்று கண்டெடுக்கப்பட்டு பருத்தித்துறை துறைமுகத்தில் பொதி சுமக்கும் தனியார் லொறி சங்க ஒன்றிய அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் அவ் அலுவலகத்தில் தகுந்த ஆதாரத்தைக் காட்டி பெற்றுக் கொள்ளலாம்.

(யோ)

### உலர் உணவு விநியோகம்
[யாழ்ப்பாணம்]

புங்குடுதீவு - நயினாதீவு பலநோக்கு கூட்டுறவுச் சங்க பாவனையாளர்களுக்குரிய ஆகஸ்ட் மாத இறுதி இரண்டு வார நிவாரண உலர் உணவுப் பொருள்கள் தற்போது சங்கக் கிளைகளில் விநியோகிக்கப்பட்டு வருகின்றன. [22]

### நிதி வழங்கக் கோரிக்கை
(யாழ்ப்பாணம்)

இடம் பெயர்ந்து கந்தர் மடம் பகுதியில் உள்ள தனியார் கல்வி நிலையம் ஒன்றில் இயங்கி வரும் புங்குடுதீவு மகா வித்தியாலயத்திற்கென பிறவுண் வீதியில் காணி ஒன்று பெறப்பட்டுள்ளதாகவும் இங்கு கொட்டகைகள் அமைப்பதற்குத் தேவையான நிதியை வழங்குமாறு யாழ் அரச அதிபரிடம் கோரியுள்ளதாகவும் மேற்படி வித்தியாலய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

(22)

### கண்டெடுப்பு
(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழக சந்தியில் கண்டெடுக்கப்பட்ட பேர்ஸ் ஒன்று எமது காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதற்குள் முத்தையா விஜிரா (5ஆம் குறுக்கு வீதி பணியந்தோட்டம்) என்பவரது அடையாள அட்டையும் அடங்குகின்றது.

★

வீதியில் கண்டெடுக்கப்பட்ட நா. சுபாஸ் சந்திரன் என்பவரது வவுனியா மாவட்டத்தில் கடமையும் அலுவலர்களுக்கான அனுமதி அட்டை மற்றும் டயறி ஒன்றும் எமது காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

★

முத்துராஜா பவானி என்பவருடைய அடையாள அட்டையும், பணப்பையும் அரியாலை ஏ.வி.றோட்டைச்சேர்ந்த இராமநாதன் என்பவரால் திருநெல்வேலி சிவன் கோவிலுக்கு அண்மையில் கண்டெடுக்கப்பட்டு எமது அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் அலுவலக நேரத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.

---

1991 ஆம் ஆண்டு ஆ. க. வெ. நடவடிக்கையின் போது ஆனையிறவுப் பிரதேசத்தில் தம்மைத் தற்கொடையாளராக்கிக் கொண்ட மேஜரும் மாவீரர்களின் போஸ்டர் படங்களை சிறு அன்பளிப்புச் செலுத்துவதன் மூலமாக தமிழீழ மாவீரர் பணிமனை, கொக்குவிலில் பெற்றுக் கொள்ளலாம் என்று தமிழீழ மாவீரர் பணிமனை அறிவித்துள்ளது

---

## 1-ம் ஆண்டு நினைவலைகள்



பிறப்பு
16. 06. 1977

வீரச்சாவு
28. 08. 1992

## லெப். தொல்காப்பியன்

(சுப்பிரமணியம் வசந்தருபன்) [ரூபா]

திதி:- 15- 09- 93

[28- 08- 1992 அன்று பெரியமண்டலாய் காவலரண் தகர்ப்பின் போது வீரச்சாவடைந்தார்]

ஓராண்டாயினும் மறந்திடுவோமா
ஒரு யுகமாயினும் எம்மகன் நீயடா
பாரினில் பார்த்திட உன்னைப் போல் மறவனில்லை
நேரினில் பார்த்திடில் நெஞ்சம் குளிருமெடா.

இவருடன் வீரச்சாவடைந்த ஏனைய மாவீரர்களுக்கும் எமது அஞ்சலிகள். 15 09 93 இன்று எமது இல்லத்தில் நடைபெறும் மதியபோசனத்திற்கு உற்றார், உறவினர், சகபோராளிகள், நண்பர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

உன் பிரிவால் நினைந்துருகும்

வசந்தகிரி, நீர்வேலி தெற்கு, நீர்வேலி. (6011)

அப்பா, அம்மா, அக்காமார் தம்பிமார், உறவினர்கள், நண்பர்கள்.

---

## கண்ணீர் அஞ்சலி

வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்களின் சமாசத்தில் 25 வருடகாலம் சேவையாற்றியவரும் ஆரம்பகால பணிப்பாளர் சபை உறுப்பினரும் சமாச வளர்ச்சிக்கு அரும் தொண்டாற்றிய பெரியாருமாகிய

## கு. எ. தேவதிரவியம்


சமாதான நீதவான்

அவர்களின் (13 09-93) அகாலமரண செய்தி கேட்டு எமது கண்ணீர் அஞ்சலியை செலுத்துகின்றோம்.

தலைவர், பணிப்பாளர் சபை,
ஊழியர்கள்.

வடமாகாண கடற்றொழிலாளர்
கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்,
201, 3 ம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம். (6024)

---



வீரச்சாவு
15-0[illegible]-19[illegible]

## வீரவேங்கை ஜெகன்

[ஜெயநாதன் ஜெறோம்]

அன்பான மகனே! நீ சிறுவயதினில் உனது உணர்வுகளுக்கெதிராகப் போராடி, இலட்சியத்தில் வெற்றி பெற்று, மாவீரனாகி இன்று இரு ஆண்டுகள் ஆகின்றன.

ஏனைய மாவீரர்களுக்கும் வீர அஞ்சலிகள்.

25, கடம் வீதி, யாழ்ப்பாணம் [5905]

அம்மா, அப்பா, அண்ணன்.

---

## 7-ம் ஆண்டு வீரவணக்கமும் இதய அஞ்சலியும்



தாயக மண்ணில்:
1964. 07. 04

திரை கடலில்:
1986. 09. 08

## வீரவேங்கை குயிலன்

(இராஜரட்ணம் இரவீந்திரன்)

(பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி பழைய மாணவன்)

திதி: 15. 09. 93

ஏழாண்டு சென்றாலென்ன
எழுபது ஆண்டு சென்றாலென்ன
என்றும் நீங்காத உன் நினைவை
எட்டியே பார்க்கின்றோம்

நாம் வடக் காக்கச் சென்ற
நல்லதொரு தலைவனுடன்
நானும் ஒருவன் என்று
நாடிச் சென்ற வீரனும் நீ!
''தமிழீழ மண்ணுக்காய்
கடலலையில் கரைந்து விட்டாய்''.

இன்று உன் நினைவு நாளில் எமது இதயத்தைப் பிழிந்து நிற்கின்றோம். அன்று குயிலனோடு வீரச்சாவு எய்திய சுதர்சனுக்கும் சிறிக்கும் எமது இதய அஞ்சலிகள்.

அன்பின்
அப்பா, அம்மா, தம்பி, தங்கை,
உற்றார், நண்பர்கள்.

(சி/7415)

---

வண்ண நிலாவே! வடிவாம்பாளே!
தண்ணமுதே எம் தாயக விடிவே!
இதய பூமியாம் மணலாறதனில்
இனிய புலியே சமாதி சமைத்தாய்!
இதயம் நெகிழும் கண்ணீருடனே
இதய அஞ்சலிகள் ஈகிறோம் நாமே!

15-09-93 இன்று எமது இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்தில் போராளிகள், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்

தேவன் வீதி,
சாவகச்சேரி வடக்கு,
மீசாலை. (6010)

- குடும்பத்தினர்

---

## நினைவு கூருகின்றோம் ... 1993-09-15

1984ஆம் ஆண்டு இதேதினத்தில் சிறிலங்கா கடற்படையினர் மேற்கொண்ட பீரங்கித் தாக்குதலில் கொல்லப்பட்ட தமிழ்க்கர்ப்பிணி.

1989ஆம் ஆண்டு தருமலை-கொத்திக்குளம் பகுதியில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

லெப் பூபதி (அந்தோனிச்சாமி உதயகுமார்-3ஆம்கட்டை தருமலை)

யாழ் நீர்வேலிப் பகுதியில் தேசவிரோதசக்திகளுடனான சமரில் வீரச்சாவெய்திய-

கப்டன் ஜெகன் / அக்காச்சி (சிவகுருநாதன் சிறீகாந்தன் நீர்வேலி தெற்கு-யாழ்)

மதன் (விநாசித்தம்பி மதனதாஸ் -மதன்வீதி நீர்வேலி-யாழ்)

யாழ்ப்பாணம் - திருநெல்வேலிப்பகுதியில் இந்தியப் படையினரால் சுட்டுக் கொலைப்பட்ட தமிழிளைஞன்

1990ஆம் ஆண்டு யாழ் - கோட்டைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

கப்டன் கீரோராஜ் (சண்முகசுந்தரம் பிரபாகரன் - அச்செழு, நீர்வேலி-யாழ்)

வவுனியாவில் சுகவீனம் காரணமாக எமைப்பிரிந்த-

லெப். ரகீம / ராஜீவ் (காசிம் துலானி - புளியங்குளம்-வவுனியா)

திருமலை-மூதூர். நீலாப்பொலவில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய-

லெப். பார்த்தீபன் (கனகசிங்கம் கோடீஸ்வரன்-கங்குவேலி, மூதூர் -திருமலை)

மட்டுநகரில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட செங்கலடி 02ஐச் சேர்ந்த தமிழிளைஞன் வாழைச்சேனைப் பகுதியில் முஸ்லீம் குழுவொன்றினால் கடத்திச் செல்லப்பட்டு படுகொலை செய்யப்பட்ட புதுக்குடியிருப்பைச் சேர்ந்த தமிழ்ப்பொதுமகன்.

1991ஆம் ஆண்டு மணலாற்றில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

லெப். வில்லியம் (ராஜகோபால் விவேகானந்தன்-மூதூர் திருமலை)

2 ம் லெப். மலர்விழி (கிருபாதேவிமயில்வாகனம்-மூதூர் திருமலை)

இந்திரன் / நித்திலன் (இராசையா பஞ்சலிங்கம் - தர்மபுரம்-கிளிநொச்சி)

பரந்தாமன் (அருளானந்தம் அமிர்தராஜ் - நாவடிதெற்கு கொக்குவில்-யாழ்)

1992ஆம் ஆண்டு கட்டைக்காட்டுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட திடீர்ச்சமரில் வீரச்சாவெய்திய-

கப்டன் புண்ணியம் (கனகலிங்கம் புவனேஸ்வரன்-யோகபுரம், மல்லாவி-கிளிநொச்சி)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

[சி-7419]

### சிந்தனைக்கு

எமது எதிர்காலச் சந்ததி வாழ
நிச்சயமாக எமக்கோர் நாடு அவசியம்.
இல்லாவிட்டால் எங்களைப் போல்தான்
நாளை எமது எதிர்காலச் சந்ததியும்
துன்பப்படும், வருத்தப்படும்.

— திலீபன்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 15-09-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2028
த. பெ. எண்-05

## வரலாற்று நிர்ப்பந்தம்

சிறிலங்கா அரசைப் பொறுத்து இனப்பிரச்சினைக்கு இராணுவத்தீர்வு என்பது முடிந்த முடிவாகிவிட்டது. அரசாங்கம் யுத்தத்தில் வெற்றிபெற காலவரையறையுடன் கூடிய பணிப்புரையினை முப்படைத் தளபதிக்கு விடுத்துள்ளது 1994 ஆம் ஆண்டு யூன் மாத இறுதிக்குள் யுத்தத்தில் வெற்றி பெற்றாக வேண்டுமென்பது டி. பி. விஜேதுங்காவின் முடிவாகும்.

சிறிலங்கா ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா அண்மைக் காலமாக இலங்கையில் இனப்பிரச்சினையே இல்லை எனச் சாதிக்கத் தொடங்கியதில் இருந்தே இனப் பிரச்சினைக்கு அரசு இராணுவ தீர்வையே நாடி நிற்கின்றது என்பது தெளிவாகப் புலனாகியது. அதன்பின், பிரிட்டனில் தூதுவராக இருந்த ஜெனரல் சேபால ஆட்டிக்கல ஜனாதிபதியின் பாதுகாப்பு ஆலோசகராக நியமிக்கப்பட்டமையும், படைத்துறைக் கட்டமைப்பிலும் செய்த பாரிய மாற்றம் அதற்கான ஏற்பாடுகளாகவே இருந்தன.

தமிழ் மக்களுக்கு எதிரான போரில், வெற்றி பெற சிறிலங்கா அரசாங்கமும், இராணுவத்தரப்பும் பல தடவை காலக் கெடுக்களை விதித்துள்ளன. இதில், முன்னாள் இராஜாங்கப் பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜயரெட்ணாவில் இருந்து தற்போதைய பாதுகாப்புச் செயலாளரும், பாதுகாப்பு ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா வரையிலும் விதிவிலக்கில்லை. 1991 ஒக்டோபரில், அதாவது சுமார் இரண்டு வருடங்களுக்கு முன், 'ஒப்பரேசன் வலம்புரி' முடிந்த கையோடு ''நாம் யாழ் நகரில் இருந்து 1.5 கிலோ மீற்றர் தூரத்தில் நிற்கிறோம். விரைவில் நகருக்குள் பிரவேசிப்போம்'' என ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா கூறியதும் இங்கு ஞாபகப் படுத்தக் கூடியதே.

இருப்பினும், இம்முறை அரசாங்கம் விடுத்த காலக் கெடுவிற்குள் தமிழர் தாயகத்தில் பெரும் போர்கள் நிகழ்வதற்கான சாத்தியப்பாடுகள் அதிக

## ஆம்! திலீபா, பார்த்துக்கொள்.

மருத்துவ பீடம் காத்திருக்க,
மக்களைக் காக்கவென,
போர்க் கோலம் கொண்ட,
பார்த்தீபா பாரிக்கு
இல்லைத்......... திலீபா,
உன் தேசத்தைப் பார்.
நெற்ப் பெருமிதத் தோடுநிற்கும்
உன் தோழரைப் பார்,
நெஞ்சம் நிமிர நடக்கும்,
உன் மக்களைப் பார்.
எல்லைகளிலுள்ள
எதிரியின் அரண்களிலெல்லாம்,
ஏறி மிதித்து விட்டு,
நிமிர்ந்து நிற்கிறோம்.
உப்பு நீருக்குள் - எங்கள்
உதிரத்தை,
சேர்த்தவர்களைச்
சாய்த்துக் கொண்டே,
நிமிர்ந்து நிற்கிறோம்.
வெற்றிக் குவியல்களைக் கண்டு,
நீயும் மில்லரும் கூட,
வியப்பது தெரிகிறது
சகோதரா! இவை மட்டுமா?
சுயபொருளாதாரத்தின்,
ஏற்றம் கண்டும்தான்.
உன்னூர் மூலவளங்களால்,
உயர்ந்துநிற்கும் தொழிற்சாலைகள்
கண்டு களிப்புறுவது தெரிகிறது.
காவற்துறையோடு,
நீதிநிர்வாகமும்,
சீராற்றுநிற்பது கண்டு - உனது
சிந்தை நிறைவது தெரிகிறது.
கல்வி கலைகளைக் கண்டு
கலைகளின் ஏற்றம் கண்டு
இறுமாந்துநிற்பதும் தெரிகிறது.
ஆ! திலீபா,
தமிழீழத் தலைவன்,
காத்திரமான அரசுக்குரிய,
கடப்பாடுகளெல்லாவற்றையும்,
கவனித்துக் கொண்டிருக்கிறான்.
சட்ட பூர்வமுள்ள - ஈழம்
சடுதியென்று... வரும்.
விண்ணிலிருந்து தோழரோடு
பார்ப்பேனென்றாயே,
பார்த்துக்கொள்

- மீசாலைப்பூர் கமலா

### இலங்கையில் நிரந்தர அமைதிக்கு

# தமிழர் தன்னாட்சி கோரிக்கை ஏற்கப்பட்டே ஆகவேண்டும்

[கொழும்பு]

''இலங்கையில் நிரந்தரமான அமைதி ஏற்படவேண்டுமானால் தமிழர்கள் முன்வைக்கும் தன்னாட்சிக் கோரிக்கைகள் ஏற்கப்பட்டே ஆகவேண்டும்.'' இவ்வாறு பி.பி.ஸி தனது இலங்கை தொடர்பான செய்தி விமர்சனத்தில் தெரிவித்தது.

தமிழர்கள் தமது தன்னாட்சிக் கோரிக்கைகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என்ற நம்பிக்கைக்கு மத்தியில் கடந்த பல வருடங்களாக வடக்கிலும், கிழக்கிலும் அரசுக்கெதிரான போராட்டம் நடைபெற்று வருகிறது.

ஆனால் ஜனாதிபதி திரு. டி.பி. விஜேதுங்க இலங்கையில் இனப்பிரச்சினை இல்லை என்றும் வெறுமனே பயங்கரவாதப் பிரச்சினையே உள்ளது என்றும் அடிக்கடி கூறிவருகிறார்.

இவரது இக் கருத்துக்களால் சிங்கள மக்களிடமிருந்து ஜனாதிபதிக்கு ஓரளவு ஆதரவு பெருகக்கூடும் ஆனால் இலங்கையில் பூர்வீக வரலாற்றை அலட்சியம் செய்யும் ஜனாதிபதியின் கருத்துக்களால் தமிழ் மக்கள் சலிப்படைவார்கள். அத்துடன் ஜனாதிபதியின் கடும் போக்குக் கொள்கை காரணமாக தமிழ் மக்களது மனித அடிப்படை உரிமைகள் இனிமேல் மேலும் கூடுதலாக அலட்சியம் செய்யப்படலாம் என்று ஏற்கனவே பல குடியுரிமைக் குழுக்கள் எச்சரிக்கைகளை விடுத்திருந்தன என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

## அம்பாறையில் செஞ்சிலுவை நடவடிக்கை நிறுத்தம்

(கொழும்பு)

அம்பாறை மாவட்டத்தில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் செயற்பாடுகள் இம்மாதத்துடன் நிறுத்தப்படும் என இலங்கையிலுள்ள சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் நிர்வாகச் செயலாளர் மட்டக்களப்பு சமாதானக் குழுச் செயலாளருக்கு அறிவித்துள்ளார்.

அம்பாறையிலுள்ள அலுவலகம் இம்மாதம் 30ஆம் திகதியுடன் மூடப்படும் என அவர் தெரிவித்துள்ளார். வடக்கு கிழக்கில் அம்பாறை தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் தனது பணிகளைத் தொடர்ந்து மேற்கொள்ளும்.

இதேவேளை அக்கரைப்பற்று சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அலுவலகம் தனது சேவையை இழமையில் இரு தினங்கள் நடாத்துமென அறியவருகிறது.

சட்ட திட்டங்களை

## அடிக்கடி மாற்றும் நாடுகளில் சிறிலங்காவுக்கு முதலிடம்

[கொழும்பு]

சட்டதிட்டங்களை அடிக்கடி மாற்றும் ஒரு நாடாக சிறிலங்கா இருப்பதால் மக்கள் சட்டத்தின் முன் செல்லும் போது சட்டத்தரணிகள் பல இன்னல்களை அனுபவிக்க வேண்டி இருக்கிறது என்று இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் செயலாளர் அஜந்த குமார பி.பி.சியின் சந்தேசிய ஒலிபரப்புக்கு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், எழுபதாம் ஆண்டு முதல் 93-ம் ஆண்டு வரையிலான 23 வருடத்தினுள் இலங்கை இரண்டு அரசியலமைப்புக்களை உருவாக்கியது என்றும், இதேவேளை இந்த அரசியலமைப்புக்கும் பல திருத்த மசோதாக்கள் பல வழிகளில் வந்து கொண்டிருக்கின்றன என்றும் தெரிவித்தார்.

எனவே சுதந்திர நீதிமன்றம் போன்று சுதந்திர சட்டத்தரணிகள் சங்கம் ஒன்றும் உருவாக்கப்பட வேண்டும் எனவும் குறிப்பிட்டார். அத்துடன் கொலைகள் நடைபெற்ற காலங்களில் சட்டத்தரணிகளுக்கு ஏற்பட்ட பாதிப்புகள் தொடர்பாக ஆராய ஒரு சமிட்டி நியமிக்கப்பட வேண்டும் எனவும் அவர் வேண்டுகோள் விடுத்தார்.

## ஊவா மாகாணத்தில் மீண்டும் தமிழர் கைது

(கொழும்பு)

ஊவா மாகாணத்தில் தமிழ் இளைஞர்கள் மீண்டும் பொலிசாரினால் கைது செய்யப்படுகின்றனர். இதனால் ஊவா மாகாணத்தில் அமைதியின்மை தலை தூக்கலாம். இவ்விடயத்தில் பொலிசார் அவதானமாக நடந்து கொள்ள வேண்டும் என பதுளை மாவட்ட எம்.பியான டி.வி சென்னன் ஊவா மாகாணத்திற்கான பிரதி பொலிஸ்மா அதிபரை கேட்டுக் கொண்டுள்ளார்.

எல்லைப் பொலிஸ் பகுதியில் உள்ள பல்லேகட்டுவ நகர், கமனுகல ஆகிய இடங்களில் உள்ள இந்துக்களின் கோவில்களில் தற்போது ஆடிவேல்விழா நடைபெற்றுவருகின்றது. கோவில் திருவிழாவில் கலந்து கொள்ளச் செல்லும் தமிழ் இளைஞர்களை பொலிசார் கைது செய்து தடுத்து வைத்துள்ளனர். இதனால் பெற்றோர் தங்கள் தங்கள் பிள்ளைகளை வீட்டைவிட்டு வெளியே அனுப்புவதற்கு அஞ்சுகின்றனர் என சென்னன் எம். பி. சுட்டிக்காட்டியுள்ளார்.

## கசிப்பு காய்ச்சியவருக்கு சமூகசேவைத் தண்டனை

(சுன்னாகம்)

காவல் துறையினர் விடுத்த எச்சரிக்கைகளையும் மீறி கசிப்பு தொடர்ந்து காய்ச்சி வந்த கட்டுவன் தெற்கைச் சேர்ந்த நபரொருவருக்கு 12 மாத கட்டாய சமூகசேவைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. கட்டுவன் தெற்கு வைரவர் கோவிலடியைச் சேர்ந்த புலேந்திரன் புஷ்பராஜா என்பவர் ஏற்கனவே 3 தடவைகள் கசிப்பு உற்பத்தி செய்தமைக்காக காவல்துறையினரால் எச்சரிக்கப்பட்டிருந்தார். எனினும் அவர் தொடர்ந்து கசிப்பு உற்பத்தியை மேற்கொண்டதையடுத்து சுன்னாகம் காவல்துறையினரால் $7\frac{1}{2}$ போத்தல் கசிப்பும் 10 போத்தல் கோடாக்கலவையும் மேற்படி நபரிடமிருந்து கைப்பற்றப்பட்டதையடுத்து சுன்னாகம் மாவட்ட நீதிமன்றில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு ரூபா 15,000/- தண்டமாக விதிக்கப்பட்டது. எனினும் அவர் அபராதம் செலுத்தாததையடுத்து 12 மாதகால கட்டாய சமூக சேவைத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது. (11)

### வல்லிபுர ஆழ்வார் உற்சவம்

ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று 15-ம்திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது

# புலிகளுக்கு ஆதரவளித்தது

மக்கள்
இவ்வாறாக ஒவ்வொரு குடியிருப்பாளர்களும் ஆறுபடிவங்கள் நிரப்பி பொலிஸ் நிலையத்தில் பதிவு செய்ய வேண்

போரில்
பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளனர். இவ்வாறு சமித்திர பர்ணான்டோ தனது விமர்சன கட்டுரையில் தெரிவித்துள்ளார்.

இருந்தன.

தமிழ் மக்களுக்கு எதிரான போரில், வெற்றி பெற சிறிலங்கா அரசாங்கமும், இராணுவத்தரப்பும் பல தடவை காலக் கெடுக்களை விதித்துள்ளன. இதில், முன்னாள் இராஜாங்கப் பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜயரெட்ணாவில் இருந்து தற்போதைய பாதுகாப்புச் செயலாளரும், பாதுகாப்பு ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா வரையிலும் விதிவிலக்கில்லை. 1991 ஒக்டோபரில், அதாவது சுமார் இரண்டு வருடங்களுக்கு முன், 'ஒப்பரேசன் வலம்புரி' முடிந்த கையோடு "நாம் யாழ் நகரில் இருந்து 1.5 கிலோ மீற்றர் தூரத்தில் நிற்கிறோம். விரைவில் நகருக்குள் பிரவேசிப்போம்" என ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா கூறியதும் இங்கு ஞாபகப்படுத்தக் கூடியதே.

இருப்பினும், இம்முறை அரசாங்கம் விடுத்த காலக் கெடுவிற்குள் தமிழர் தாயகத்தில் பெரும் போர்கள் நிகழ்வதற்கான சாத்தியப்பாடுகள் அதிகமாக உள்ளதாகவே தெரிகின்றது. இந்நிலையில் யுத்தம் என்பது கடந்த காலத்தைப் போலவே தமிழ் மக்கள் விரும்பியோ விரும்பாமலோ அவர்கள்மீது திணிக்கப்படும் ஒன்றாக வந்துவிட்டது.

ஆகையினால், விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் சிங்கள பேரினவாதிகளுக்கு எதிராக தமிழ் மக்கள் போராடியே ஆகவேண்டும். போருக்குத் தம்மை தயார் படுத்திக் கொண்டே ஆகவேண்டும். அதைத்தவிர இன்று தமிழ் மக்களுக்கு வேறுவழி இருப்பதாகத் தெரியவில்லை.

இனப்பிரச்சினைக்கு ஓர் அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்பதை தமிழ் மக்கள் நீண்டகாலமாகவே வற்புறுத்தி வந்துள்ளனர். இதற்கென அவசரப்பட்டு ஆயுதப் போராட்டத்தை அவர்கள் தெரிவு செய்யவில்லை. நீண்டகால சாத்விகப் போராட்டத்தை நடத்திய பின்பே அவர்கள் இம்முடிவிற்கு வந்தார்கள். அதன் பின்பும் அரசியல் தீர்விற்கு அவர்கள் தயாராகவே இருந்தனர்/இருக்கின்றனர்.

இதேவேளை, இனப்பிரச்சினைக்கு ஓர் அரசியல் தீர்வு காணப்பட்டாக வேண்டும் என இலங்கையிலுள்ள பௌத்த, சிங்கள அமைப்புக்களைத் தவிர்ந்த ஏனைய மத மற்றும் மதச் சார்பற்ற பல அமைப்புக்களும் கோரிக்கை விடுத்திருந்தன. அத்தோடு, சில சர்வதேச அமைப்புக்களும், நாடுகளும் கூட இனப்பிரச்சினைத் தீர்வில் மத்தியஸ்தம் வகிக்க முன்வந்தன. இறுதியாக ஐ. நா.சபையின் சமரச முயற்சி பற்றியும் பேசப்பட்டது.

ஆயினும், சிங்கள அரசு, இவை எதையும் கருத்திற் கொள்ளவில்லை. பௌத்த, சிங்களப் பேரினவாத சிந்தனையில் இருந்து விடுபடவுமில்லை. உலக அனுபவங்களையும், வரலாற்றுப் பாடங்களையும் கற்றுக் கொள்ளவோ அன்றி புரிந்து கொள்ளவோ அது தயாராக இல்லை.

அதாவது, கெடுகுடி சொற்கேளாது என்பது போல், யுத்தத்தைத் தவிர சிங்களப் பேரினவாதம் வேறு எதையும் ஏற்கத் தயாராக இல்லை. இந்நிலையில், தமிழ் மக்களுக்கும் அதை எதிர்த்துப் போராடுவதைத் தவிர வேறுவழியில்லை. அதாவது, தமிழர் தமது சுதந்திரத்திற்காக மட்டுமல்ல, இன அழிவில் இருந்து தப்பி உயிர் வாழ்வதற்காகவும் போராடியே ஆகவேண்டிய நிலை உருவாகியுள்ளது. இது, அவர்கள் மீது சுமத்தப்பட்ட வரலாற்று நிர்ப்பந்தமாக மாறியுள்ளது.

## நடவடிக்கை நிறுத்தம்

(கொழும்பு)

அம்பாறை மாவட்டத்தில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் செயற்பாடுகள் இம் மாதத்துடன் நிறுத்தப்படும் என இலங்கையிலுள்ள சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் நிர்வாகச் செயலாளர் மட்டக்களப்பு சமாதானக் குழுச் செயலாளருக்கு அறிவித்துள்ளார்.

அம்பாறையிலுள்ள அலுவலகம் இம்மாதம் 30ஆம் திகதியுடன் மூடப்படும் என அவர் தெரிவித்துள்ளார். வடக்கு கிழக்கில் அம்பாறை தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் தனது பணிகளைத் தொடர்ந்து மேற்கொள்ளும்.

இதேவேளை அக்கரைப்பற்று சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அலுவலகம் தனது சேவையை கிழமையில் இரு தினங்கள் நடாத்துமென அறியவருகிறது.

...யில் பூரி... தீவிர அலட்சியம் செய்யும் ஜனாதிபதியின் கருத்துக்களால் தமிழ் மக்கள் சலிப்படைவார்கள். அத்துடன் ஜனாதிபதியின் கடும் போக்குக் கொள்கை காரணமாக தமிழ் மக்களது மனித அடிப்படை உரிமைகள் இனிமேல் மேலும் கூடுதலாக அலட்சியம் செய்யப்படலாம் என்று ஏற்கனவே பல குடியுரிமைக் குழுக்கள் எச்சரிக்கைகளை விடுத்திருந்தன என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

...வந்த கட்டுவன் தெற்கைச் சேர்ந்த நபரொருவருக்கு 12 மாத கட்டாய சமூகசேவைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. கட்டுவன் தெற்கு வைரவர் கோவிலடியைச் சேர்ந்த புலேந்திரன் புஷ்பராஜா என்பவர் ஏற்கனவே 3 தடவைகள் கசிப்பு உற்பத்தி செய்தமைக்காக காவல்துறையினரால் எச்சரிக்கப்பட்டிருந்தார். எனினும் அவர் தொடர்ந்து கசிப்பு உற்பத்தியை மேற்கொண்டதையடுத்து சுன்னாகம் காவல்துறையினரால் $7\frac{1}{2}$ ... விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு ரூபா 15,000/- தண்டமாக விதிக்கப்பட்டது. எனினும் அவர் அபராதம் செலுத்தாததையடுத்து 12 மாதகால கட்டாய சமூக சேவைத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

(11)

### வல்லிபுர ஆழ்வார் உற்சவம்

ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று 15-ம்திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது

# புலிகளுக்கு ஆதரவளித்தது எப்படி குற்றமாகும்?

## —கோவை ராமகிருஷ்ணனின் மனைவி கேள்வி

(சென்னை)

பிரதமருக்கே லஞ்சம் கொடுத்ததாகச் சொன்ன ஹர்சத்மேத்தா சுதந்திரமாக திரிகிறார். பம்பாய் நகரையே சுடுகாடாக்கியவர் ராஜ மரியாதையோடு உலா வருகிறார். பாபர் மசூதியை உடைத்தவர்களுக்கு பாராட்டுவிழா. இப்படியெல்லாம் நடக்கும் இந்த நாட்டில் எல்லோரும் ஆதரவு காட்டிய விடுதலைப் புலிகளுக்கு நாங்கள் ஆதரவு காட்டியது எப்படிக் குற்றம் ஆகும் என்று கோவை ராமகிருஷ்ணனின் மனைவி வசந்தி கூறியுள்ளார்.

தடா சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருப்பவரும், திராவிடக் கழகத்தின் ஒரு அணியின் பொதுச்செயலாளருமான கு. ராமகிருஷ்ணனும் அண்மையில் கோவை நீதிமன்றத்திற்கு கொண்டு செல்லப்பட்ட போது மற்றும் சிலரும் விசாரணைக்காக அண்மையில் கோவை நீதிமன்றத்திற்கு கொண்டு வரப்பட்டபோது அவர்களைப் பார்ப்பதற்காக அவர்களுடைய உறவினர்கள் பலர் நீதிமன்றத்திற்கு வந்திருந்தனர்.

அப்போது கண்ணீர் மல்கிய நிலையில் தமிழகப் பத்திரிகையாளர் ஒருவரிடம் பேசிய திருமதி வசந்திராமகிருஷ்ணன் மேலும்கூறுகையில்; மறைந்தமுன்னாள் பிரதமர் இந்திராகாந்தி மற்றும் தமிழக முதல்வர் எம். ஜி ஆர் இவர்களை விடவா விடுதலைப்புலிகளுக்கு வேறு யாரும் ஆதரவு காட்ட முடியும்? நாங்களும் விடுதலை புலிகளை ஆதரித்தோம். இல்லையென்று மறுக்கவில்லை இந்த நாடே புலிகளுக்காகக் குரல் கொடுத்தபோது-அரசியல்வாதிகள் தங்கள் ஆதரவை ஒட்டுமொத்தமாக தெரிவித்த போது நாங்களும் ஆதரித்ததில் என்னதான் தவறு?

திருமணம் செய்த மூன்றே மாதத்தில் கர்ப்பிணியாக இருந்த என்னைத் தவிக்க விட்டு என் கணவரைக் கைது செய்து சிறையில் அடைத்தனர். நான் கடந்த இரண்டு வருடங்களாக ஒன்றே கால் வயதுக்குழந்தையையும் வைத்துக் கொண்டு ஆள் துணை ஏதும் இல்லாமல் படும் கஷ்டம் சொல்லி மாளாது என்றும் அவர் விபரித்தார்.

அத்துடன் ஆகஸ்ட் 1ஆம் திகதி பொலிசாரால் கைது செய்யப்பட்ட என் கணவர் மீது ஆகஸ்ட் 8ஆம் திகதியன்று புலிகளுடன் சேர்ந்து சதிசெய்ததாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார்.

## பா. ஜனதாவைத் தவிர்த்து. கூட்டணி அமைக்க முயற்சி

- எஸ். சந்திரசேகர்

(சென்னை)

பாரதிய ஜனதா கட்சி அல்லாத எதிர் கட்சிகளுக்கிடையே கூட்டணி ஒன்றை ஏற்படுத்துவதான முயற்சியில் கட்சித்தலைவர்கள் சிலர் ஈடுபட்டிருப்பதாக சமாஜவாதி ஜனதாக் கட்சியின் தலைவரும் முன்னாள் பிரதமருமான எஸ். சந்திரசேகர் கூறியுள்ளார்.

புதுச்சேரியில் நேற்று முன்தினம் செய்தியாளர் மத்தியில் பேசிய அவர் மேலும் கூறுகையில். நான்கு வட மாநிலங்களில் சட்டமன்றங்களுக்கான தேர்தல்கள் நடைபெறும் போது தமது கட்சி, ஜனதாதள், ஜனதாதள் (அஜீத்பிரிவு) சமாஜவாதி கட்சி போன்றவற்றுடன் கூட்டணி அமைப்பதில் பிரச்சினை எதுவும் இல்லை என்றும் தெரிவித்தார்.

அத்துடன் காங்கிரஸ் அல்லாத பிறகட்சிகள் ஆட்சிபுரிந்த போதே நாட்டின் பொருளாதாரம் சீர்குலைந்ததாக கூறப்பட்டுவரும் குற்றச்சாட்டுகளையும் அவர் வன்மையாக மறுத்தார்.

**வளமான வாழ்வு பெற - ஏர்க்களம் நாம் சென்றிடுவோம்**

மக்கள் இவ்வாறாக ஒவ்வொரு குடியிருப்பாளர்களும் ஆறுபடிவங்கள் நிரப்பி பொலிஸ் நிலையத்தில் பதிவு செய்ய வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இராணுவப் ... விட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

வெளியேறாது இருக்கும் குடும்பங்களுக்கு போதிய உணவுப் பொருள்கள் வழங்கப்படுவதில்லை எனவும் அங்குள்ள மக்களுக்கு நிவாரணம் வழங்கவென சேகரிக்கப்பட்ட பணத்தை, மந்திரியினதும் இராணுவத்தினதும் செல்வாக்குப் பெற்ற ஒருவர் தனது பெயரில் வங்கியில் இட்டிருப்பதாகவும் குறைகூறினார்.

போரில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளனர். இவ்வாறு சமித்திர பர்ணான்டோ தனது விமர்சன கட்டுரையில் தெரிவித்துள்ளார்.

அண்மையில் இராணுவ கட்டளையிடும் அமைப்பில் ஏற்படுத்தப்பட்ட மாற்றம் ஜனகபுர, கொக்கிளாய் பகுதித் தாக்குதலின் பின் எதிர்பார்க்கப்பட்ட ஒன்றே. இது குறித்து எவரும் ஆச்சரியப்படவில்லை.

எவ்வாறு இவ் அமைப்பை மாற்றிய போதிலும் ஒருவரே தலைமையில் இருக்கிறார் இது பழைய தவறுகளைத் தொடர்வதாகவே அமையும் என அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

திலீபன் ... ணம் வட்டத்தில் நல்லூர் கந்தசுவாமி கோவில் வீதியில் வண்ணை சுருட்டுத் தொழிலாளர் சங்க ஊழியர்களும், நல்லூர் வட்டத்தில் நல்லூர் கந்தசுவாமி ஆலய வீதியில் கோண்டாவில் கந்தர்மட மக்களும் சாவெட்டி வட்டத்தில் சாமியன் அரசடி நெல்லியடி கிழக்கு. நெல்லியடி வர்த்தகர் சங்கத்தில் அல்வாய் சிற்றூர் மக்களும், உடுப்பிட்டி வட்டத்தில் உடுப்பிட்டி மத்தி வைரவர் கோவிலடியில் அச்சுவேலி பிரதேசமக்களும், பருத்தித்துறை வட்டத்தில் அல்வாய் முத்துமாரியம்மன் கோவிலடியில் புலோலி சிற்றூர் மக்களும், பளை வட்டத்தில் பளை பிரதேசசபை முன்றலில் புலோப்பளை சிற்றூர் மக்கள், மற்றும் விறகு வெட்டுவோர் சங்க உறுப்பினர்களும், கொடிகாமம் வட்டத்தில் புகையிரத நிலைய அருகாமையில் வரணி சின்னம்மன் கோவிலடி சனசமூகநிலையத்தினரும்மந்துவில் பாரதி வித்தியாலய மாணவர்கள், மாசேரி சனசமூகநிலையத்தினர், சாவகச்சேரி வட்டத்தில் மனம்குணாப்பிள்ளையார் கோவில் முன்றலில் சங்கத்தானை, மட்டுவில், சந்திரபுரம், கல்வயல், மீசாலை மக்களும், கடற் தொழிலாளர் சங்கத்தினரும், மட்டுவில் மத்திய மகா வித்தியாலயம், நுணாவில் அ. மி. த. க. பாடசாலை மாணவர்களும் கைதடி வட்டத்தில் கைதடி சந்திக்கு அண்மையில் நாவற்குழி மக்களும், கைதடி விக்கினேஸ்வரா வித்தியாலய மாணவர்களும், தீவகக் கோட்டத்தில் நல்லூர் கோவில் முன்றலில் தீவக முஸ்லிம் வட்டார மக்கள், கணேச வித்தியாலயம், புங்குடுதீவு நடராசா வித்தியாலயம் ஆகியவற்றின் மாணவர்களும், அடையாள உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொள்ளுவார்கள்.

### சிரமதானம்

மேலும் நாளைய தினம் பின்வரும் இடங்களில் சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன. சங்கானை, சித்தன்கேணி, பிரதானவீதி திருத்தத்தை அப்பகுதி மக்களும், சண்டிலிப்பாய் வட்டத்தில் கட்டுடை குடியேற்றத்திட்டத்தில் வீதி துப்புரவைசுபாஸ் கட்டுடை சனசமூகநிலையத்தினரும், சிரமதானப் பணிகளை மேற்கொள்ளுவார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய - சிறிலங்கா

# கருத்து வேறுபாடுகள் விரைவில் தீர்க்கப்படுமாம்

(சென்னை)

சிறிலங்கா அரசு வடபகுதி கடல் பிராந்தியத்தில் படகுகள் மற்றும் கப்பல்கள் செல்வதற்கு தடைவிதித்துள்ளமை ? அடுத்து இரு நாடுகளுக்கும் இடையில் ஏற்பட்டிருக்கும் கருத்து வேறுபாடுகள் விரைவில் தீர்க்கப்படுமென்று சிறிலங்கா வெளியுறவு அமைச்சக அதிகாரி ஒருவர் தெரிவித்ததாக இந்திய வானொலி தெரிவித்தது.

மேலும், இதுகுறித்து இந்திய அதிகாரிகளுடன் ஆலோசித்து வருவதாகவும் இத்தடை விதிக்கப்பட்டு சில நாட்களில் பருத்தித்துறை கடற்பரப்பில் இந்திய மீனவர் படகுகளை சிறிலங்கா கடற்படையினர் மூழ்கடித்தமையும் ஒருவர் உயிரிழந்தமைக்கும் மூன்று பேர் காயமடைந்தமைக்கும் சிறிலங்கா அரசு வருத்தம் தெரிவித்ததாகவும் அவர் தெரிவித்தார்.

## களஞ்சியத்தில் திருட்டு

(நெல்லியடி)

நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க களஞ்சியத்தில் பல பெறுமதிமிக்க பொருள்கள் இனந்தெரியாதோரால் களவாடப்பட்டுள்ளன.

கடந்த 25 ஆம் திகதி நடைபெற்ற இத்துணிகர திருட்டுச் சம்பந்தமாக பொது முகாமையாளர் பருத்தித்துறை காவல் பணிமனையில் முறையிட்டுள்ளதாகவும் தெரிய வருகின்றது. (30)

## தீவிரவாதிகளை எதிர்க்க பி. எல். ஓவிற்கு பயிற்சி

### பிரிட்டன் வழங்க இணக்கம்

(லண்டன்)

பாலஸ்தீனிய விடுதலை இயக்கத்திற்கு இராணுவ மற்றும் தீவிரவாதிகளை எதிர்கொள்வதற்கான பயிற்சிகளை வழங்க பிரிட்டன் இணக்கம் தெரிவித்துள்ளது. பாலஸ்தீனியப் பகுதியில் தீவிரவாதிகளை எதிர்கொள்ளவும், இரகசியத் தகவல்களை பரிமாறவும் பிரிட்டன் அரசாங்கம் முன்வந்துள்ளது.

இதற்கென பாலஸ்தீனியர்கள் பிரிட்டன் செல்லவும், பிரிட்டனின் நாசகார நடவடிக்கைகள் எதிர்ப்பு பிரிவினர் பாலஸ்தீனிய பகுதிகளுக்கு செல்லவும் இணக்கம் காணப்பட்டிருப்பதாகவும் மேலும் கூறப்படுகிறது.

படைத்துறைக் இராஜினாமாவை பகிரங்கப்படுத்த வேண்டாம் எனவும் கோரப்பட்டதாம். இதே வேளை அப்பதவியைப் பொறுப்பேற்க விமானப் படைத் தளபதி சம்மதம் தெரிவித்திருந்தார் ஆரம்பத்தில் பதவி இராஜினாமாவை பகிரங்கப்படுத்துவதில்லை என அவர் வால்டர் பெனாண்டோ ஒப்புக் கொண்டும் இருந்தார்.

இதேவேளை ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா தனது கிழக்கு மாகாண சுற்றுப் பயணம் தொடர்பாக ஜனாதிபதிக்கு விளக்கமளிக்கச் சென்ற போதே படை கட்டமைப்பில் செய்யப்பட்ட மாற்றம் குறித்து கூறப்பட்ட காரணம் பாதுகாப்பு செயலர் செப்டம்பர் ஆறாம் திகதி தமது பதவியை இராஜினாமாச் செய்யும் கடிதத்தை கையளிக்கப் போவதாகவும் அன்று முதல் அப்பதவியைப் பொறுப்பேற்குமாறு கோரப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அடுத்த நாள் ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவுடன் மட்டக்களப்பிற்கும், திருமலைக்கும் பயணம் மேற்கொண்டபோது. இது பற்றி இருவர் தரப்பிலும் பிரஸ்தாபிக்கப்பட்டது.

இருப்பினும் இக்கள் அன்று (ஆறாம் திகதி) பாதுகாப்பு செயலாளரின் ராஜினாமா பற்றிக் கசியத் தொடங்கியது.

இந்த நிலையிலும் கூட இந்த மாற்றங்கள் குறித்து இராணுவ உயர்மட்ட அதிகாரிகளுக்கு உத்தியோக பூர்வமாக எந்த அறிவித்தலும் தரப்படவில்லை. ஆனால் பாதுகாப்புச் செயலாளர் வால்டர் பெனாண்டோ அன்று மதியம் அவரது சகபாடிகளைச் சந்தித்து தனது பதவி விலகலை அறிவித்து அவர்களிடம் இருந்து விடைபெற்றுக் கொண்டு சென்றார்.

அன்று மதியம் ஜனாதிபதியின் செயலாளர்கே. எச். ஜே. விஜேதாஸ 'இரகசியம்' என்ற தலைப்புடன் தட்டெழுத்தில் பொறிக்கப்பட்ட உத்தியோக பூர்வ கடிதத்தில் இராணுவ கட்டமைப்பில் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்கள் பற்றி புதிய பாதுகாப்புச் செயலாளர் ஹமில்டன் வனசிங்காவிற்கு எழுதினார்.

இதில் விசேஷம் என்னவென்றால் 'இரகசியம்' என எழுதப்பட்ட கடிதத்தின் உள்ளடக்கம் அனைத்தும் அதே தினத்தில் பத்திரிகைகளுக்கும் வெளியிடப்பட்டது.

## இராணுவத்

கனை வெல்லவேண்டும்'' என்றார்

அயல்நாடுகளில் விரலடையாளம் மட்டும் இடுபவர்கள் இராணுவத்தில் அங்கம் வகிக்கும்போது ஐந்தாம் ஆண்டு சித்தியடைந்தவர்களை இராணுவத்தில்சேர்ப்பது தவறல்ல எனவும் அவர் குறிப்பிட்டார்

## 'குமண இன்று' வரும்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திற்கான உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களை ஏற்றிக் கொண்டு கொழும்பில் இருந்து புறப்பட்ட 'குமண' கப்பல் இன்று பருத்தித்துறையை வந்துசேருமென எதிர் பார்க்கப்படுகின்றது.

இக் கப்பலில் அரிசி 1807 மெற்றிக்தொன், சீனி 775 மெற்றிக் தொன், பருப்பு 100 மெற்றிக் தொன், பயறு 45 மெற்றிக் தொன், உழுந்து 15 மெற்றிக்தொன், ரின் மீன் 24 மெற்றிக்தொன் மற்றும்கிராம சேவகர்களுக்கான 100 துவிச்சக்கர வண்டிகள் என்பன எடுத்து வரப்படுகின்றன. தபால் பொதிகள் எதுவும் எடுத்து வரப்படவில்லை என தெரிவிக்கப்பட்டது. [பா], [நி

## ஆயர் யாழ். திரும்பினார்

(வடமராட்சி)

யாழ் ஆயர் அதி வண. தோமஸ் சௌந்தரநாயகம் அடிகளார் நேற்று கொழும்பிலிருந்து 'வாதுவ' கப்பல் மூலம் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார். (யோ)

## 'றெட்பானா' பிரதிநிதிகள் இருவர் யாழ் வந்தனர்

(வடமராட்சி)

அரச சார்பற்ற றெட்பானா நிறுவனத்தைச் சேர்ந்த இரண்டு பிரதிநிதிகள் நேற்றுக் காலை 'வாதுவ' கப்பல் மூலம் யாழ். வந்து சேர்ந்தனர்.

றெட்பானா உதவி வதிவிடப் பிரதிநிதி திரு. றோவர் ஸ்குங், சுவீடன் றெட்பானா பிரதிநிதி திரு. கூகோ ஹேம் ஆகியோரே நேற்று வந்தவர்களாவர்.

இவர்கள் இருவரும் யாழ்ப்பாணத்தில் இரண்டு தினங்கள் தங்கியிருந்து றெட்பானா நிறுவனத்தின் வேலைத்திட்டங்களை பார்வையிடவுள்ளனர். (யோ)

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

### 14-09-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 10915

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்.

28-1686, 24-5119, 41-8449, 42 1059, 27-8515
41-5599, 42-3267, 27-8160, 40-1516, 26-1609
40-7299 24 8140, 28-0364.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்.

27-4920, 26 3410, 24-5137, 24-6811, 25 5050
25-0306, 24 3906, 41 9746, 26-6029, 26-5493
24 4238, 24 3071, 26-6075, 24-5041.


நான் நேசித்த தமிழீழ மண்ணில் வாழ்கின்ற

அனைவரும் எமது

உரிமையை மீட்பதற்கான பெரும் புரட்சிக்கு

தயாராக வேண்டும்.


— திலீபன்

தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்

யாழ். மாவட்டம் [சி-7422]



வெலிங்டன் சந்திக்கருகில்!




UNIKCO

COMPUTER CENTRE

Computerபயிற்சிநெறிகள் புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன

- BASIC Language (including Graphics Sound & Files)
- PASCAL Language (பல்கலைக்கழகம் செல்லவிருப்பவர்கட்கு மட்டும்)
- d BASE III PLUS and MS - DOS
- LOTUS 1-2-3 and MS - DOS
- WORD PROCESSING (Word Star Rel. 5.5) and MS - DOS

வார இறுதி வகுப்புக்கள் ஆரம்பம்: 07-09-93 - 3.30 p. m

வார நாள் வகுப்புக்கள் ஆரம்பம்: 18-09-93 - 3.30 p. m

Equipment Used: ACER, ARC Computers. (IBM Compatibles)

மேலதிக விபரங்களுக்கு:

37, CLOCK TOWER ROAD, JAFFNA

(சி-7399)


## அறிவித்தல்

### யாழ். மாவட்ட புடவை நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்

மேற்படி சங்கத்தின் கிளைக்குழுத் தேர்தல்கள் விரைவில் நடாத்த தீர்மானிக்கப்பட்டுள்ளதால் வாக்காளர் இடாப்பு 30-09-93 உடன் மூடப்படும் என்பதை அறியத்தருகின்றோம். மேலும் விபரங்கள் தேவைப்படுவோர் இருபாலை வீதி, கோண்டாவில் சங்கத் தலைமையகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

ச. மாணிக்கவாசகர்
செயலாளர்

14-09-93 (6019)


யாழ் நகர் ஸ்ரீதர் திரையரங்கில்

VON RYAN'S EXPRESS

இத்துடன் 'இதயபூமி 1' [மண்கிண்டிமலை இராணுவமுகாம் தகர்ப்பு] ஒளிவீச்சு காண்பிக்கப்படுகிறது

தினசரி மாலை 4.00 மணி, 6.00 மணி

சனி, ஞாயிறு தினங்களில்


## திறந்த பல்கலைக் கழகம்

### மாணவர் மன்றத் தேர்தல்

1993-ம் ஆண்டுக்கான மாணவர் மன்ற பிரதிநிதிகள் தேர்வு 15-9-93 புதன்கிழமை காலை 9 00 மணி தொடக்கம் மாலை 5.00 மணிவரை யாழ் பிராந்திய நிலையத்தில் நடைபெறும்.

பதிவுசெய்தும், பதிவுகளைப் புதுப்பித்தும் வாக்காளர் பட்டியலில் உள்ள மாணவர்கள் தயவு செய்து சமுகமளித்து வாக்களிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்

பிறவுண் வீதி,
கொக்குவில். (சி/7425)

உதவிப்பணிப்பாளர்.

## மரண அறிவித்தல்கள்



## COMPUTER CENTRE

**Computerபயிற்சிநெறிகள் புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன**

- BASIC Language (including Graphics Sound & Files)
- PASCAL Language (பல்கலைக்கழகம் செல்லவிருப்பவர்கட்கு மட்டும்)
- d BASE III PLUS and MS - DOS
- LOTUS 1-2-3 and MS - DOS
- WORD PROCESSING (Word Star Rel. 5.5) and MS - DOS

வார இறுதி வகுப்புக்கள் ஆரம்பம்: 07-09-93 - 3.30 p.m
வார நாள் வகுப்புக்கள் ஆரம்பம்: 18-09-93 - 4.30 p.m

Equipment Used: ACER, ARC Computers. (IBM Compatibles)

மேலதிக விபரங்களுக்கு:

**37, CLOCK TOWER ROAD, JAFFNA**

(சி-7399)


## உள்ளக் குமுறல்கள்



**தியாகராசா சிவபூரணம்**
மலர்வு : 29-12-1950
உதிர்வு : 21-03-1993

**சோமலிங்கம் தியாகராசா**
மலர்வு : 19-10-1953
உதிர்வு : 23-09-1992

காலமெல்லாம் எமைக் காப்பர் என்ற நினைவைக் கனவாக்கி
காற்றாய் மறைந்து விட்ட கண்கண்ட தெய்வங்களே!
கதறி அழுது கண்ணீர் அஞ்சலி செய்வதன்றி
வேறொன்றும் நாமறியோம் கையறு நிலையானோம்.

என்ற பொழுதில் பெரிதுவந்தீர்
சான்றோன் என ஆக்க இல்லையே நீங்கள்

-குடும்பத்தினர்

புலோப்பளை றோட்,
பளை.

(6020)

தொடர்பு கொள்ளவும்.

14-09-93 (6019) ச. மாணிக்கவாசகர்
செயலாளர்


**யாழ் நகர் ஸ்ரீதர் திரையரங்கில்**

## VON RYAN'S EXPRESS


இத்துடன் 'இதயபூமி 1' [மன்கிண்டிமலை இராணுவமுகாம் தகர்ப்பு] ஒளிவீச்சு காண்பிக்கப்படுகிறது

தினசரி மாலை 4.00 மணி, 6.00 மணி
சனி, ஞாயிறு தினங்களில்
காலை 10.30 மணி,
மாலை 4.00 மணி, 6.00 மணி (சி-7352)


## 31-ம் நாள் கண்ணீர் அஞ்சலி

மலர்வு:
26-05-1972

உதிர்வு:
15-08-1993



### இராசேந்திரம் கஜேந்திரன்

நண்பா!
காலம் உனைப் பாராட்டக்
காத்திருக்கும் வேளையிலே!
நிலையிலா வாழ்வை — நீ
முடித்திட்ட செய்தி கேட்டு!
எண்ணிய எண்ணங்கள்
தொலைந்து போக!
எண்ணமெனாம் கண்ணீரால்
உடைந்து சாக!
எம்மோடு கலந்திட்ட - நின் பாடல்கள்
காதோடு இருக்க
ஏன் சென்றாயோ!
நீ மட்டும் தனியாக!

உன் பிரிவால் வாடும்
தம்பசிட்டி நண்பர்கள்.

[6023]

திகதி தேர்வு 15-9-93 புதன்கிழமை காலை 9.00 மணி தொடக்கம் மாலை 5.00 மணிவரை யாழ் பிராந்திய நிலையத்தில் நடைபெறும்.

பதிவுசெய்தும், பதிவுகளைப் புதுப்பித்தும் வாக்காளர் பட்டியலில் உள்ள மாணவர்கள் தயவுசெய்து சமுகமளித்து வாக்களிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்

பிறவுண் வீதி,
கொக்குவில். (சி/7425) உதவிப்பணிப்பாளர்.

## மரண அறிவித்தல்கள்



### இராசதுரை மரியநாயகம்

குருநகரைச் சேர்ந்த இராசதுரை மரியநாயகம் (சம்மாட்டி, முன்னாள் கார்மேல் மாதா ஆலயப் பங்குச்சபை தலைவர்) 12-09-93 ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் காலமானார்.

இவர் பாக்கியத்தின் அன்புக் கணவரும், திருமதி அ. ஜெட்சீலி, காலஞ்சென்ற ம. ஜெகநாதன், திரு ம இராஜன் திருமதி வி வசந்தி, திருமதி மு மஞ்சு, திருமதி ர. சூரி ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், காலஞ்சென்ற கி அந்தோனிப்பிள்ளை, திரு. செ விஜயன், திருமதி ரா. மரியசீலி, திரு. மி. முத்துக்குமார், திரு சி. ரவி ஆகியோரின் அன்பு மாமனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்கம் பற்றிய அறிவித்தல் பின்னர் தெரிவிக்கப்படும்.

தகவல்:
ம. இராஜன்
(மகன்)

இல: 7/3,
மத்திய கிழக்கு வீதி,
குருநகர், யாழ்ப்பாணம்.

(சி/7424)

### திருமதி அடைக்கல ராக்கினி றொபேட் கிளைவ்

இளவாலையைச் சேர்ந்த அடைக்கல ராக்கினி றொபேட் கிளைவ் அவர்கள் காலமாகிவிட்டார். அவர்களின் பூதவுடல் இன்று (15-09-93) புதன்கிழமை மாலை 4 மணிக்கு 17/3, கச்சேரி நல்லூர் வீதி இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு புனித யுவானியார் ஆலயத்தில் இடம்பெறும் திருப்பலியின் பின் யாழ். மரியன்னை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

தகவல்:
றொபேட் கிளைவ்
(கணவர்)

17/3 கச்சேரி நல்லூர் வீதி,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

(6026)


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1993-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 15-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது